# தரம் - 08

# சுகாதாரமும் உடற்கல்வியும்

## அலகு 11

### பகுதி - II

## இனப்பெருக்கம் சார்ந்த சுகாதாரத்தைப் பேணுவோம்



## இனப்பெருக்கம் சார்ந்த சுகாதாரம்

எஸ்.எம் நாஸர்
பது / பசறை தமிழ் மகா வித்தியாலயம் ( தேசிய பாடசாலை )

# இனப்பெருக்கம் சார்ந்த சுகாதாரம்

ஒருவர் தனது இனத்தைப் பெருக்குவதற்குத் தேவையான உடலாரோக்கியம், சிறந்த உளநிலை, சமூகநிலை என்பவற்றைச் சிறப்பாக பேணுவது இனப்பெருக்க சுகாதாரமாகும்.



# இனப்பெருக்கம் சார்ந்த சுகாதாரத்தில் பாதிப்பை ஏற்படுத்தும் காரணிகள்

1. பாலியல் துஷ்பிரயோகமும் துன்புறுத்தல்களும்.
2. கட்டிளமைப் பருவத்தில் கருத்தரித்தல்.
3. திட்டமிடப்படாத கருத்தரித்தல்.
4. பாலியல் நோய்கள்.



# ❖ பாலியல் துஷ்பிரயோகமும் துன்புறுத்தல்களும்.

## பாலியல் துஷ்பிரயோகம்

குழந்தையொன்றின் விருத்தியில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய பாலியல் செயற்பாடுகளுக்கு இரையாக்குவதும், அவ்வாறான செயற்பாடுகளுக்கு எவ்வகையிலாயினும் ஒத்துழைப்பு வழங்குவதும் பாலியற் துஷ்பிரயோகம் எனப்படும்.


## பாலியல் துன்புறுத்தல்

பாலுறுப்புக்களைச் சிறுவர்களுக்குக் காட்டுதல் சிறுவர்களைக் கொண்டு பாலுறுப்புக்களை ஸ்பரிசிக்கச் செய்தல், சிறுவர்களைக் கொண்டு பாலியல் தொடர்பான திரைப்படங்கள், புகைப்படங்கள், செய்திகள் போன்றவற்றைக் கைமாறச் செய்தல் போன்றவை பாலியல் துன்புறுத்தல்களாகும்.



# பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் துன்புறுத்தல்களிலிருந்து பாதுகாப்பு பெறுவது எப்படி ?







# பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் துன்புறுத்தல்களிலிருந்து பாதுகாப்பு பெற பின்பற்ற வேண்டிய வழிமுறைகள்

- தேவையற்ற விதத்தில் உடலை ஸ்பரிசிக்க எவருக்கும் இடங்கொடுக்காதிருத்தல்.
- உடலை ஸ்பரிசிக்க எவராவது முயற்சி செய்தால் உடனடியாக அதற்கு மறுப்புக் காட்டுதல் அல்லது கூடிய விரைவில் அவ்விடத்தை விட்டு அகலுதல் அல்லது உதவி கோருதல்.
- உதவி கிடைக்காத நிலையில் புத்திசாதுரியமாக அவ்விடத்தை விட்டும் விலகுதல்.
- எவராயினும் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு முயற்சி செய்தால் நம்பிக்கையான ஒருவரிடம் அது பற்றிக் கூறுதல்.
- தெருக்களில் ஒவ்வொருவரும் கூறும் செய்திகளை நம்புவதில் கவனமாக இருத்தல்.
- அவசியமற்ற விதத்தில் உங்களில் அக்கறை செலுத்தும், உங்களுக்குப் பரிசுகள் வழங்கும், காசு கொடுக்கும் நபர்களோடு எச்சரிக்கையாக நடந்து கொள்ளுதல்.
- நிதமும் உங்களோடு தனிமையிலிருக்க முயற்சிக்கும், உங்கள் உடலழகை வர்ணிக்கும் நபர்களோடு எச்சரிக்கையாக நடந்துகொள்ளல்.

# பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் துன்புறுத்தல்களுக்கு உள்ளாவதால் ஏற்படும் பாதிப்புகள்

- உள நெருக்கீட்டிற்கு ஆளாகுதல்
- கல்விச் செயற்பாடுகள் பாதிப்படைதல்
- தேவையற்ற கர்ப்பந் தரித்தல்
- பாலியல் தொற்றுநோய்கள் ஏற்படுதல்
- சமூகத்தில் அவமானத்துக்கு ஆளாகுதல்
- உடல் ரீதியிலான பாதிப்புகள் ஏற்படுதல்



# கட்டிளமைப் பருவத்தில் நிகழும் கருத்தரித்தல் காரணமாக ஏற்படும் விளைவுகள்.


- இவ்வாறான கருத்தரித்தலை எதிர்கொள்வதற்கான உடல்ரீதியான தயார்நிலை இல்லாதிருத்தல்.
- தாயாவதற்கான உளரீதியிலான தயார்நிலை இல்லாதிருத்தல்.
- கர்ப்பகாலத்திலும், பிரசவ காலத்திலும் சிக்கல்கள் அதிகரித்தல்.
- தானும் வளர்ச்சிப் பருவத்திலிருப்பதால், தனது வளர்ச்சிக்குப் போன்றே சிசுவின் வளர்ச்சிக்கும் தேவையான ஊட்டத்தினைப் பெற்றுக் கொடுப்பது கடினமாகுதல்.
- சமூக அழுத்தங்களுக்கு ஆளாகுதல்.
- கல்விச் செயற்பாடுகள் பாதிப்படைதல்.



# பாலியல் நோய்கள்

பாலியல் தொடர்பு அல்லது பாலியல் செயற்பாடொன்றின் காரணமாக பரவும் நோய்கள் பாலியல் நோய்கள் எனப்படும்.

- ❖ கொணோரியா - Gonorrhea
- ❖ சிபிலிசு - Syphilis
- ❖ ஹர்பீஸ் - Herpes simplex
- ❖ பாலியல் உண்ணி - Warts
- ❖ எயிட்ஸ் - HIV/AIDS



# பாலியல் நோய்கள் ஏற்படுவதால் உருவாகக்கூடிய பிரச்சினைகள்

- சமூகத்தால் இழிவாகக் கருதப்படுதலும் வசைகளுக்கு ஆளாகுதலும்
- கல்விச் செயற்பாடுகள் பாதிக்கப்படுதல்
- பாலுறுப்புக்களில் காயங்கள், சீழ்வடிதல், வேதனை, அரிப்பு போன்ற பிரச்சினைகள் தோன்றுதல்.
- மனவழுத்தம் ஏற்படுதல்.
- மூளை, இதயம், நரம்புகள் என்பன பாதிக்கப்படுதல்.
- கர்ப்பகாலத்தில் கிருமிகளால் முளையம் தொற்றடைவதால் முதிராத குழந்தைகள் உருவாகுதல், இறந்தநிலையில் குழந்தை பிரசவித்தல், அங்கவீனமான குழந்தைகள் உருவாகுதல் போன்ற பிரச்சினைகள் தோன்றலாம்.
- பிரசவத்தின்போது தாயிடமிருந்து தொற்றும் ஒரு சில கிருமிகள் காரணமாக சிசு பார்வையை இழக்கலாம்.




# இனப்பெருக்கத் தொகுதியின் மகோன்னதத்தைப் பாதுகாப்பதில் உங்களது பங்களிப்பு.

- ❖ சரியான அறிவைப் பெற்றுக்கொள்ளல்.
- ❖ ஆரோக்கியமான நடத்தைகளைப் பின்பற்றுதல்.
- ❖ சமூகப் பெறுமானங்களுக்கேற்றவாறு வாழுதல்.



# சரியான அறிவைப் பெற்றுக்கொள்ளல்


- ❖ இனப்பெருக்கத் தொகுதியின் அமைப்பு.
- ❖ இனப்பெருக்கத் தொகுதியின் செயற்பாடு.
- ❖ வளர்ச்சியோடு இனப்பெருக்க தொகுதிகளில் ஏற்படும் மாற்றங்கள்.
- ❖ ஊட்டத்தேவைகள்.
- ❖ பாலியல் நோய்கள்.
- ❖ இனப்பெருக்க தொகுதியின் ஆரோக்கியம் பேணும் பழக்கங்கள்.
- ❖ துஷ்பிரயோகமும் துன்புறுத்தல்களும்.
- ❖ தீய பாலியல் நடத்தைகளைத் தவிர்ப்பதற்கான திறன்கள்.



# ஆரோக்கியமான நடத்தைகளைப் பின்பற்றுதல்

- தனிநபர் சுகாதாரம் பேணுதல்.
- எமது நாட்டுக்குப் பொருத்தமான பருத்தித் துணிகளால் தைக்கப்பட்ட உள்ளாடைகளை அணிதல்.
- உள்ளாடைகள் சுத்தமாகவிருத்தல்
- திருமணமாகும் வரையில் பாலியற் தொடர்புகளைத் தவிர்த்தல்
- பாலியற் தொடர்புகளைத் திருமணம் செய்த துணைவன் / துணைவிக்கு மாத்திரம் மட்டுப்படுத்துதல்.
- இனப்பெருக்கத் தொகுதி தொடர்பான நோய்களேற்படின் பொருத்தமான வைத்திய ஆலோசனை பெறுதல்.
- ஊட்டமுள்ள உணவுகளை உட்கொள்ளல்.





# சமூகப் பெறுமானங்களுக்கேற்றவாறு வாழுதல்

- திருமண வாழ்வின் அர்த்தத்தைப் புரிந்து கொள்ளுதல்.
- எதிர்ப்பாலாரோடு சகோதர உணர்வுடன் செயலாற்றுதல்.
- ஆபாசப் புத்தகங்கள், சஞ்சிகைகள், வீடியோ, சினிமா, புகைப்படங்கள், இறுவட்டுக்கள் போன்றவற்றை நிராகரித்தல்.
- தாய் தந்தையரின் பொறுப்பு, பெறுமதி என்பவற்றை விளங்கிக் கொள்ளுதல்.
- திருமணமான கணவன், மனைவியிடையே அன்னியோன்யமான புரிந்துணர்வு, விசுவாசம், அன்பு, மதிப்பு போன்ற குணாம்சங்கள் காணப்படுதல்.



# தரம் - 08

# சுகாதாரமும் உடற்கல்வியும்

## அலகு 11

பகுதி - II

## இனப்பெருக்கம் சார்ந்த சுகாதாரத்தைப் பேணுவோம்



## இனப்பெருக்கம் சார்ந்த சுகாதாரம்

எஸ்.எம் நாஸர்
பது / பசறை தமிழ் மகா வித்தியாலயம் ( தேசிய பாடசாலை )